புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# பண்டைத் தமிழரின் பழமொழியும் பண்பாடும்

முனைவர் பா. கில்டா
தமிழாசிரியர்,
சென்னை பெண்கள் மேல் நிலைப் பள்ளி,
கொருக்குபேட்டை, சென்னை – 600 021.

*முன்னுரை:*

*ஓரினத்தின் பண்பாட்டை உணர்ந்து கொள்ள பயன்படும் கருவூலங்கள் அவ்வினதவர் அன்றாடம் பயன்படுத்தும் 'பழமொழிகள்வாழ்வின் எல்லாத் துறைகளிலும் .எனலாம் ' ,ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக ஒரு சமுதாயத்தில் .பழமொழிகள் பளிச்சிடுகின்றன ,புத்தி மதிகளை ,கருத்துகளை ,எண்ணங்களை ,பண்பாட்டில் உருவான நம்பிக்கைகளை அனுபவங்களை நறுக்குத்தெரிந்தார் போல நாலு வார்த்தைகளில் சொல்வதே 'பழமொழியாகும்'. இது இலக்கிய நயத்துடன் இல்லாமல் கொச்சை சொற்களிலும் இருக்கலாம். பாமர மக்களும் பழமொழிகளை சரளமாக பயன்படுத்துவது நம் பண்பாட்டின் அறிவு ,முதிர்ச்சியையும்அனுபவ முதிர்ச்சியையும் .காட்டுகிறது ,அனுபவ முதிர்ச்சியையும் , இந்நிலையில் தமிழர் வாழ்வில் பழமொழிகள் பெறும் இடம் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் .நோக்கமாகும்*

*பழமொழி பற்றிய அறிஞர்களின் கருத்து -:*

*பொருத்தம் ஆகிய ,தெளிவு ,சுருக்கம் ;பழமொழிகள் அறிவின் வளர்ச்சியிலே பிறந்தவை'' நாள்தோறும் இறந்து கொண்டிருக்கும் இவ்வுலகில் என்றும் இறவாமல் ,சிறப்புக்களால் .வாழ்கின்றன'' என்கிறார் கிரேக்க நாட்டு அறிஞர் அரிஸ்டாட்டில்.*

*வரையறை ;-*

*தமிழில் பழமொழி இலக்கியத்திற்கு முதன் முதலாக வரையறை தந்தவர் தொல்காப்பியர். செய்யுள் வடிவில் எழுத, நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும் எண்மையும் என்று இவை .விளங்கத் தோன்றி குறித்த பொருளை முடித்தற்குவரூஉம்ஏது நுதலிய முதுமொழி என்ப என்பது தொல்காப்பிய நூற்பா,அதாவது.'' ஏதேனும் ஒரு சமூக சூழலில் ஒரு குறிப்பிட்ட கருத்தை உணர்த்துவதற்குத் துணையாக வரக்கூடிய அல்லது பயன்படுத்தக் கூடிய ஆழ்ந்த அறிவினை சுருக்கமாகவும்தெளிவாகவும் எளிமையாகவும் கூரும் பழமையான மொழி பழமொழி , .எனலாம்'' இந்த வரையறை பழமொழியை விளங்கிக்கொள்ளத் துணை செய்கிறது.*

*பழமொழியின் சிறப்பு-:*

*உலகின் பல பகுதிகளிலும் பழமொழிகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை நம்மால் அறிய முடிகின்றது.*

*'பழையச் சொற்கள் அறிவுக் களஞ்சியங்கள்'*

*'இருளில் தீக்குச்சி போன்றவை பேச்சில் பழமொழிகள்'*

*அமெரிக்கா-*

*போக்கைப் பழமொழியை விட வேறெதுவும் துல்லிய-சமுதாயத்தின் மனப்'மாக எடுத்துக்கூற முடியாது'*

இங்கிலாந்து-

.பழமொழிக்கு மேல்சொல் இல்லை'
இதை யாரும் மறுக்க முடியாது'

அயர்லாந்து-

பழமொழிகள் உண்மையின் குழந்தைகள்'

.வேல்ஸ்-

'மக்கள் எப்படியோ அவர்களின் பழமொழியும் அப்படி'

.ஸ்காட்லாந்து-

திருடனையும் அற'ிவாளியாக்க வல்லது

.பிரான்ஸ்-

'பழமொழியிலிருந்து அறிவு வருகிறது'
அறிவிலிருந்து பழமொழி வருகிறது'

ரஷ்யா-

*சேகரிப்பும் பதிப்பும்-:*

*மக்களிடையே கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு நாட்டுபுற இலக்கியவடிவங்கள் , சிறந்த முறையில் பங்காற்ற முடியும் என்பதைஎழுத்திலக்கியப் படைப்பாளிகள் நன்கு உணர்ந்திருந்தனர் இலக்கிய வகைகள் பழமொழி மட்டுமே மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்டு 'பழமொழி நானூறு' என்ற தனிநூலாக உருவாகப் பெற்றதுஇந்நூலின் ஒவ்வொரு . ' வெண்பாவிலும் ஒரு பழமொழியைப் பொதிந்துமுன்றுறையனார்' இந்நூலை உருவாக்கினார்.*

*தொல்காப்பியர் முதுமொழி என்ற சொல்லை பயன்படுத்தியிருந்தாலும்சங்க , இலக்கியத்திலேயேபழமொழி என்ற சொல்லாட்சி காணப்படுகிறது.*

*நன்று படு மருங்கில் தீதில் என்றும்''*
*''தோன்று படு பழமொழி*

*என்னும் அகநானூற்றுப் பாடல் தொடரில் பழமொழி என்ற சொல் பயன்படுத்தப்படுவதைக் காணலாம் .*

*ஐரோப்பிய பாதிரிமார்களின் பங்கு-:*

*அயல்நாட்டிலிருந்து சமயம் பரப்ப வந்த பாதிரியார்கள்தான் முதன்முதலில் பழமொழிகளை சேகரித்து அதை பாதுகாக்க வேண்டும் என முயற்சிகள் மேற்கொண்ட பெருமை அவர்களையேச் சாரும்.*

*அவர்களோடு நெருங்கிப் பழகவு ,மக்களை புரிந்து கொள்ளவும்ம்மிகுதியாக , எனவே அவற்றை .உதவக்கூடிய நாட்டுப்புற இலக்கிய வகையாகப் பழமொழிகளை கருதினர் .சேகரித்து ஆங்கில மொழிப்பெயர்ப்போடு வெளியிட்டனர்*

*பீட்டர் பெர்சிவல்)Peter Percivel (1842ஆம் ஆண்டு ஆயிரத்து எண்ணூற்றுஎழுபது மூன்று பழமொழிகள் கொண்ட பழமொழி அகராதியை ஆங்கில மொழிப்பெயர்ப்போடு வெளியிட்டார் . இவரே தமிழில் பழமொழிகளைத் தொகுத்து முதன் முதலில் வெளியிட்ட பெருமைக்குரியவர் .இவரே ஆகும்*

*தொள்ளாயிரத்து நானூற்று பதினேழு தமிழ்ப் பழமொழிகள் கொண்ட அகராதியை ஆங்கில விளக்கங்களுடன் ஆம் ஆண்டு 1894ஜான் லாசரஸ் வெளியிட்டார் .இதுபோன்ற பல அறிய பணிகளை அவர்கள் மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.*

*திருமணமும் குடும்பமும் பற்றிய பழமொழிகள் -:*

*இல்லறம் அமைவதற்கு அடிப்படை திருமணமாகும்திருமணம் இரண்டும் ,குடும்பம் . வாழ்க்கையின் .நாணயத்தின் இரு பக்கங்களைப் போல சேர்ந்தே செயல்படுகின்றன உண்மையான தொடக்கமே திருமணம் ஆகும் தமிழரின் குடும்ப வாழ்வின் குறிக்கோள் . திருமண உறவே.*

*நல்ல குடும்பத்தில் பெண் கொள்ள வேண்டும் என்று கருதுவது இயல்புபெண்ணுக்கு . அழகில்லா விட்டாலும் பரவாயில்லை நல்ல குணங்கள் இருந்தால் போதுமானது என்று கருதியதால் நற்பண்பு நிறைந்த குடும்பத்தையே விரும்பினர்.*

. என்பது முதுமொழி “ குரங்கானாலும் குலத்திலே கொள்ள வேண்டும்“
குழந்தையின் பண்புகள் தாயின் வளர்ப்பு முறையையும் அவளுடைய பண்பையும் ஒட்டியது . ,எனவே

“தாயைப்போல பிள்ளை ,
நூலைப்போலச் சேலை ”
என்றும்
“ ஆடு தின்னத் தழையைக் குட்டி தின்னும் ”
என்றும் கூறியதோடு
“தாயை கிணற்றடியில் பார்த்தல் பெண்ணை வீட்டில் பார்க்க வேண்டாம்.என்றனர் ”

பண்டுதொட்டே நெருங்கிய உறவினர் மணஉறவு கொள்ளுவது பல தலைமுறைகளாக பழைய உறவை அழித்து விட்டுப் புதிய உறவை .நம் தமிழ்நாட்டில் நீடித்து வருகின்றது அவர்க .நாடுவோர் பலருண்டுளைக் கண்டிக்கும் வகையில் ,

பழைய கால்வாயை தூர்க்காதே‘
புதிய வாய்க்காலை வெட்டாதே’
என்ற பழமொழியையும் உருவாக்கி உள்ளனர்.

கணவன் மனைவி என்றாகி விட்டால் கணவன் எத்தகையவன் ஆயினும் அவனை அதனால் தான் ,மதித்தேவாழ வேண்டும் என்று கருதி வாழ்வது நமது தமிழ்த்தாய்க்குலம்

க‘ல்லானாலும் கணவன்
புல்லானாலும் புருஷன்”

என்னும் பழமொழி இதனையே காட்டுகின்றதுகணவன் சம்பாதித்த பொருளை . ,சிக்கனமாக செலவு செய்து குடும்பத்தைப் பேணும் பொறுப்பு மனைவிக்கு உரியது என்பதனை

ஏர் பிடித்தவன் என்ன செய்வான்‘
பானை பிடித்தவன் பாக்கியம் ‘

என்னும் முதுமொழி விளக்கி நிற்கின்றது .

,விதவை ,இல்லையேல் .கணவன் இருந்தால் மனைவிக்கு சமுதாயத்தில் மதிப்பு உண்டு தாலியருத்தவள் என்றெல்லாம் சமுதாயத்தின் பல்வேறு ,கைம்பெண் ,மூதேவி .வசைமொழிகளுக்கு ஆளாகும் அவளை நிலை இன்னும் தொடர்கின்றது

ஆளான் இல்லாத மங்கைக்கு‘
’அழகு பாழ்
‘ஆளன் இல்லாதவன்
.என்பவை இக்கருத்துகளை விளக்கும் சான்றுகளாகும் ’ஆற்று மணலுக்குச் சரி
‘உள்ளூர் மாப்பிள்ளை
.என்பதோர் பழமொழி ’உழுதுவிட்ட காளை

உழுதுவிட்ட மாடு பழக்கத்தால் வீடு வந்து சேரும்அதுபோல உள்ளூர் மாப்பிள்ளையும் மிக . எளிதில் வீடு கருதப்படுவார் என்பது இதன் பொருள்.
திருமணமான பின் பெண் தாய்வீட்டுப்பாசத்தை விட கணவன் வீட்டு பற்று மிகுதியாக இருக்க வேண்டும்தாய் வீட்டு செல்வதை விடக் கணவன் வீட்டு வறுமை மேலென்று என்ன வேண்டும் .

உள்ளூர் பெண்ணும்‘
.என்னும் பழமொழி எழுந்தது ’அயலூர் மண்ணும் ஆகாது

இடைக்காலம் பெண்கல்வியை வெறுத்து கற்ற பெண் கற்புடையவளாக இருக்க மாட்டாள் என்பது அவர்களது கருத்து,எனவே .

பரத்தியைக் கொண்டாலும்‘
என்ற கருத்தில் ”படித்தவளைக் கொள்ளலாகாது
‘தேவாம்பை ஆனாலும் ஓலை மேல்
.என்றனர் ”எழுத்தாணி ஊன்றும் பெண் ஆகாது

தந்தையின் சிறப்பு-:

தந்தையின் அன்பை உணர்ந்த நம் மக்கள் குடும்பத்தின் அரசன் தந்தை என்றனர்அவன் . .குழந்தைகள் கேட்பாரற்று போவார்கள் ;இல்லாத குடும்பம் சீர் குன்றும்

,அப்பனது அருமை மாண்டால் தெரியும்‘

'உப்பின் அருமை உப்பு இல்லாவிட்டால் தெரியும்
என்பது கூர்ந்து நோக்கத்தக்கது.
தந்தை தான் தன மகனை ஒழுக்கம் உள்ளவனாக உருவாக்க வேண்டும்தந்தை ஒழுக்கம் . .கெட்டால் பிள்ளையும் கெடும்

தந்தை எவ்வழி'
அவ்வழிப் புதல்வன்',
அஞ்செழுத்தும் பாவனையும்'
அப்பனைப்போல் இருக்கிறதுஎன்கிறது பழமொழி "

தந்தை இறந்தபின்விதவைத்தாய் வளர்க்கும் பிள்ளை கண்டிப்பின ,்றிப் போய்விடும் என்பதனை

.என்ற சொல் மெய்ப்பிக்கும் "கம்மணாட்டி வளர்த்த கழிசடை'
'தாலி அருத்தவள் வீட்டில்
.என்றும் இழிவு படுத்திக் கூறுவார் 'தலைக்குத் தலை பெரிய தனம்

தாயைப் பற்றிய சிறப்பு;-

'தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை '
'தாய் கண் கண்ட தெய்வம்'

ஆம்தாய் தன குழந்தைகளை அன்பினால் .தாயை முதல் தெய்வமாக கொள்வது நம் மரபு ! எனவே !அன்பில் திருந்தாதவன் ஆண்டவனால் கூட திருந்த மாட்டான் அன்றோ .திருத்துகிறார் தான்

தாய்க்கு அடங்காதவன்'
.என்றனர் 'ஊருக்கு அடங்கான்

ஒரு பெண்ணிற்கு தாய் இருக்கும் வரைதான் பிறந்த வீட்டுச் சிறப்புக் கிட்டும்அதன் பிறகு . இதனை .நாத்தனார்கள் சரியாக கவனிக்க மாட்டார்கள்

.என்கிறது பழமொழி ' தாயற்ற போதே சீரற்று போகும்'

உறவினர்கள் பற்றிய பழமொழிகள்-:

எப்ப !ஆம் .குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லைோது உற்றார் உறவினர் நமக்கு பக்கத்துணை .அவர்களுடன் கூடி வாழ்ந்தாலே இன்பம் .

உறவினரின் சிறப்பை உணர்த்தும் பழமொழிகள்

மச்சானை பார்க்கிலும் உறவுமில்லை'
மயிலைப் பார்க்கிலும் கருப்புமில்லை'
'மச்சினன் உண்டானால் மலையேறிப் பிழைக்கலாம்'
'மலையேறினாலும் மைத்துனைனக் கைவிடாதே '

என்னும் பழமொழிகளால்உடன் பிறந்தவர்களின் குடும்ப நலனில்,
அண்ணன் தம்பியின் அக்கறை புலப்படும்உறவினர்கள் அருகிலிருந்தால் சிறப்பு இராது.
தூரத்தில் இருந்து வருவதால் அருமை தெரியும்

நெருங்கி வாழ்வது உறவு பகை
கிட்ட இருந்தால் முட்டப் புகை

என்னும் பழமொழி உளவியல் பாங்கோடு விளக்குகின்றது

மழலைச் செல்வம் பற்றிய பழமொழிகள்-:

மக்கட் செல்வம்மதிப்புமிகு செல்வம் என்று உணர்ந்தவர்கள் நம் தமிழ் மக்கள்எனினும் . வறுமையில் வடியோர் குறைவாகப் பெறவேண்டும் என எண்ணினார் நம் தமிழக அரசு அன்றைய நாளில்ீ

ஒன்று பெற்றால் பட்டாடை'
அதிகம் பெற்றால் ஒட்டாடை'

என முழக்கங்களால் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர்

ஆசைக்கொரு ஆணும்'
ஆஸ்திக்கொரு பெண்ணும்.என்பது பழமொழியாகும் '

அதே நேரத்தில் ,

பிள்ளையில்லாச் சோறு புழு‘
பிள்ளையில்லா செல்வம் பாழ்’.
என்னும் பழமொழிகளைப் படைத்துள்ளனர்குழந்தைகளை இளமையிலிருந்தே கண்டிப்புடன் . ,வளர்க்க விரும்பிய தமிழர்
’ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாதது‘
அடித்து வளர்க்காத பிள்ளையும்‘
முறுக்கி வளர்க்காத மீசையும் பயன்படர்’
ஆணை அடித்து வளர்‘
பெண்ணை பேணி வளர் ’
என்னும் மொழிகளால் குழந்தை வளர்ப்பின் பெருமையை காட்டுகிறது
கருத்தடை பற்றி இன்னும் மிகுதியாக பேசப்பட்டாலும்
தமிழகத்தில்,
,பிச்சையிட்டுக் கெட்டவனும் இல்லை‘
பிள்ளை பெற்றுக் கெட்டவனும் இல்லை.
என்று கருதினர்.

பெண்ணின் நிலை பற்றிய பழமொழிகள்-:

பெண் பிறருடைய அன்புக்கும் அரவணைப்புக்கும்
எல்லாக் காலத்திலும் பெண்கள் பிறருடைய அன்பிற்கும் அரவணைப்பிற்கும் உரியவர்கள் என்பதைபெண் என்றால் பேயும் இரங்கும்,
என்ற பழமொழி உணர்த்துகின்றது.
மகனுக்குத் திருமணமானதும் மகன் தாயா தாரமா என்ற போரட்டத்திற்கு உள்ளாகின்றான் மனைவியின் சொல் கேட்டு புறக்கணித்தால்
பெற்ற தாய‘ ◌ மூதேவி
புகுந்த தாரம் சீதேவியார்.என்பர்’
பல குழந்தைகளை பெற்றெடுத்த பெற்றோர் கைவிடப்படும் நிலையில்,
‘ஒரு பிள்ளை பெற்றவளுக்கு உறியிலே சோறு
நாலு பிள்ளை பெற்றவளுக்கு நடுத்தெருவிலே சோறு’
என்பது முதிர்ந்த அனுபவ வெளிப்பாடு,
ஆணையும் பெண்ணையும் சமமாக மதிக்காத சமுதாயத்தில்
ஆணாய்ப் பிறந்தால் அருமை‘
பெண்ணாய்ப் பிறந்தால் பெருமை.என்றனர் ’
ஐந்தாறு பெண் பெற்றால்‘
அரசனும் ஆண்டியாவான்’
‘ வைக்கோல் படப்புக்கு ஒரு கன்றுக்குட்டி‘
’வாழுகிற வீட்டுக்கு ஒரு பொட்டைக் குட்டி‘
என்னும் பழமொழிகளைப் படைத்தது

கைம்பெண்களின் நிலை உணர்த்தும் பழமொழிகள்-:

கைம்பெண்களை நம் சமூகம் வேண்டாப்பொருளாக
சுமையாகக் கருதுகிறது,அவளின் மகனைக்,
,என்று சாடுகிறது ’கமணாட்டி வளர்த்த கழிசிறை‘
’அறுதாலி மகனுக்கு அங்கமெல்லாம் சேட்டை‘
என்று வசைபாடுகின்றது.
தாலியறுத்தவன் இன்னொருவனை மணக்க நேரிட்டால்‘
தாலியறுத்தவர் ஏன் இருக்கிறாள்?
தாரம் தப்பியவனுக்குப்பொங்கிப்போட ’
எனப் பொங்கி பொங்கி அவள் மனம் நோகப் பேசுவதும் உண்டு.
விதவையின் துயருக்கு விடிவேது?
ஆளன் இல்லாத துக்கம்‘

அழுதாலும் தீராது அன்றோ!

மாமியார் மருமகள் பற்றிய ப் பழமொழிகள்-:

நம் தமிழ்ச் சமுதாயத்தில் அன்றும் இன்றும் மாமியார் மருமகள் சண்டை ஒரு தீராத நோயாகும் தன் மாமியாரின் . கொடுமைக்கு ஆட்பட்டவள் தன் மருமகளை ஆட்டிப் படைத்து வஞ்சம் தீர்க்கின்றனர்.

,மாமியார் மெச்சிய மருமகள் இல்லை'
மருமகள் மெச்சிய மாமியார் இல்லை,
அன்பற்ற 'மாமியாருக்குக் கும்பிடுவதும் குற்றம்தான்;
பானை ஓட்டினாலும் ஒட்டும்'
மாமி ஒட்டாள்'
மகன் செத்தாலும்'
மருமகள் தாலியறுக்கணும்'

என்னும் பழமொழிகள் இந்த காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பாடுகள்தான்.

உழைப்பும் உயர்வும் பற்றிய சிறப்புகள்-:

முயற்சி இரண்டும் மனித ,உழைப்புனை முன்னேற்றுவது ஆகும் . சோம்பலும் பிறரை நம்பி வாழ்தலும் நம்மை சிறுமைப்படுத்தும் என்ற சிந்தனை ஓட்டத்தை விளக்கும் பழமொழிகள்.

இருந்த கால் மூதேவி'
நடந்த கால் ஸ்ரீதேவி'
இருந்தவன் எழுந்திருக்கிறதுகுள்ளே'
நடந்தவன் நெடுந்தூரம்என்பது '

முயற்சியின் மெருமையை வலியுறுத்துகின்றன பிறரை நம்பி வழ்பவனைக் கண்டித்து

'தன் கையே தனக்கு உதவி'
என்பது உருவானது.

உழவர்களின் பெருமை பற்றிய பழமொழிகள்-:

தொழில்களின் பெருமையைப் பேசும் பழமொழிகளின் பல நம் நாடு உழவின் பெருமையை உணர்ந்த நாடு நம் நாட்டின் முதுகெலும்பே உழவுத் தொழில்தான் அதன் மேன்மையை

'மேழிச் செல்வம் கோழை படாது'
உழுதவன் கணக்குப் பார்த்தால்
உழவுக்கு கூட மிஞ்சாது என்பர்'
'ஏர் நடந்தால் பேர் நடக்கும்'
ஏழை இழந்தார் பேரை இழந்தார்'
கார்த்திகைக்குப் பின் மழையில்லை'
கர்ணனுக்குப் பின் கொடையில்லை'
பயிர் பார்க்காமல் கெட்டது'
மனைவி பேணாமல் கெட்டாள்'
உள்ளூர்ப் பெண்ணும்'
அயலூர் மண்ணும் ஆகாது '

என்பது நிலப் பராமரிப்பு பற்றிக் கூறுகிறது தனம் பார்த்து நிலம் வாங்க வேண்டும் என்பதை .

நெருப்பு இருக்கிற காட்டை நம்பினாலும்''
நீர் இருக்கிற காட்டை நம்பக்கூடாது.என்பர் '
மலையடிப் புஞ்சை மதகடி ந'ஞ்சை.என்பதும் நிலத்தின் தனம் பற்றியதே '

உழவனின் உழைப்பு பற்றிய சிறப்புகள் -:

'உழுதவன் காட்டைப் பார்

மேய்த்தவன் மாட்டைப் பார்.
‘உரத்தை தள்ளும் உழவு’
‘வெட்டி களை எடுத்தாள் கட்டு முக்காலம்’
‘நன்செய்க்கு நாலுழவு
’புன்செய்க்கு ஏழுழவு
உழுது அலர்ந்தது‘பழுதாகாது.என்பன உழைப்பின் மேன்மையை சுட்டிக் காட்டுகின்றது ‘

கூட்டு வாழ்வு பற்றிய பழமொழிகள் -:

,மாந்தர் கூடி வாழ்வதே சமூக வளர்ச்சிக்கு வேர் இதனையே
‘கூடி வாழ்ந்தால் கோடி நன்மை’
‘தனிமரம் தோப்பாகாது’
‘ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்’
’குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை‘என்ற பழமொழிகள்
கூட்டு வாழ்வின் பலத்தை பறைசாற்றுகின்றன.

பிறருக்கு உதவுவது குறித்த பழமொழிகள்-:

ஒருவருக்கு ஒருவர் உதவி வாழ்வதே சமுதாய வாழ்வின் உயிர் நாடி.
‘முன் கை நீண்டால் தான் முழாப்கை நீளும்’,
கல்யாணத்தில் இல்லாத வாழைக‘ாய் பந்தலில் கட்டி ஆடுகிறதாம்’! என்றும் உதவி செய்யாத பொது ஏளனம் செய்வர்.

கடவுளும் விதியும் குறித்த பழமொழிகள்-:

,விதிக் கொள்கையும் நம் சமூகத்தின் அடிப்படை ,சமய நம்பிக்கையும்
‘பட்ட காலிலே படும்
’கேட்ட குடியே கெடும்
‘தண்ணிழல் தன்னை விடாது’
‘விதை விதைத்தவன் வினையறுப்பான்
’தினை விதைத்தவன் தினை அறுப்பான்
‘ஆறிலும் சாவு நூறிலும் சாவுஎன்று துணிந்து நல்ல செயல்களில் ஈடுபடத் ’ தூண்டினர்.

பொய்வேடம் பற்றிய பழமொழிகள்-:

வஞ்சகர்கள் வெறிவேடமிட்டு நல்லவர்களை நஞ்சாகக் கொள்கின்றனர் ,சொல்லாலும் . உடையாலும் தன்னுடையஇயல்பை மறைத்து வாழும் நயவஞ்சகர்களுக்கு ,
?நாமம் போட்டவனெல்லாம் தலிதனா‘’
?விபூதி பூசினவனெல்லாம் ஆண்டியா’
‘முக்காட்டுக்குள்ளே கைக்காட்டா?’
‘முக்காட்டுக்குள்ளே மூடுமந்திரமா ?’ என்னும் பழமொழிகள் சாகுகின்றன.

ஆய்வுகள்-:

தமிழ்ப் பழமொழிகளை ஆராய்ந்தவர்கள் மிகக்குறைவு .சாலை ,இளந்திரையன்.தே ,லூர்து. வானமாமலை.நா ,பெருமாள்.வ போன்ற ஒரு சிலரே தமிழ்ப் பழமொழிகளை ஆய்வுக்கு உட்படுத்தியவர்கள்.

முடிவுரை-:

இங்ஙனம்தமிழ்ப் பழமொழிகள் தமிழரின் சமுதாயத்தை உள்ளவாறு காட்டும் , கண்ணாடிகளாக விளங‍்குகின்றன.இவற்றை பேணிக்காத்தும் நம் மாபெரும் கடமையாகும் .

********* ********* ********** ********* ********* ********** ********** **********